சோலையார்பேட்டை - பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி தனி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.அ.அன்பரசன்.,

ந.க. அ6/ 1598 /2017 நாள் : 30.01.2018

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைபடுத்துதல் திட்டம் 2017 - வேலூர் மாவட்டம் - நாட்றம்பள்ளி வட்டம் - சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி - சர்வே எண்.313/3எ-ல் 2.01 ஏக்கர் பரப்பில் மனன்யா ஹோம்ஸ் என்ற பெயரில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கியது - 1 முதல் 79 வரையிலான வீட்டு மனைகளை வரன்முறை செய்து ஆணையிடுதல் - சார்பாக

பார்வை :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் மண்டலம், வேலூர் - அவர்களின் கடித ந.க.1270/2017/வேம3 , நாள் : 30.11.2017
2. அரசாணை எண்.78/ வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை/ந.வ.4(3) , நாள் : 04.05.2014
3. அரசாணை எண். 172/ வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை / ந.வ.4(3), நாள் : 13.10.2017
4. அரசாணை எண். 255/ஊரக வளர்ச்சித்துறை (சி2) நாள் : 18.08.1997
5. கருவூலக செலுத்துச்சீட்டு எண் : 5/680, நாள் : 17.01.2018
6. பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி பல்வகை ரசீது எண். 3411 நாள்: 11.12.2017 மற்றும் ரசீது எண். 3412 நாள்: 17.01.2018
7. பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி மன்ற தீர்மானம் எண். 74 நாள்: 18.01.2018

******

ஆணை :

பார்வை 1ல் காணும் வேலூர் நகாட ஊரமைப்பு துறை துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தில் வேலூரர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம் , சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி / கிராம சர்வே எண். 313/3எ- ல் 2.01 ஏக்கர் பரப்பளவில் 79 வீட்டு மனைகளுடன் அமைக்கபட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைபடுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவிற்கு ம.வ/ ந.ஊ.து.இ (வே.ம) வரன்முறைபடுத்துதல் எண். 24(ஆர்)/2017 என எண்ணிடப்பட்டு கொள்கையளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துறையால் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பார்வை 3ல் காணும் அரசாணை எண். 172/ வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை / ந.வ.4(3), நாள் : 13.10.2017-ல் குறிப்பிட்டுள்ளவாறு கீழ்க்காணும் கட்டணங்களை அரசிற்கு கீழ்க்கண்டுள்ள விவரப்படி செலுத்தியுள்ளார்.

| வ. எண் | கட்டண விவரம் | மனை எண் | மனையின் பரப்பளவு | கட்டண விவரம் | செலுத்தப்பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | வரன்முறைபடுத்துதல் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.30/- | 1 முதல் 79 வரை | 5391.38 sq.m | 161742/- | DPC - 0217 - 60 - 800 - AT 0007<br>Date : 17.01.2018 |
| 2 | வளர்ச்சிக் கட்டணம் 1 சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் | 1 முதல் 79 வரை | 5391.38 sq.m | 134785/- | Local Body<br>Receipt No - 3411<br>Date : 11.12.2017 |
| 3 | வீட்டு மனைப்பிரிவு அங்கீகார கட்டணம் ( Rs.1000/- per acre) | | 2.01 Acre | 2000/- | Local Body<br>Receipt No - 3412<br>Date : 17.01.2018 |

Scanned by CamScanner

பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் மண்டலம், வேலூர் அவர்களின் கடிதத்தின்படியும், அரசாணை எண். 255/ஊரக வளர்ச்சித்துறை (சி2) நாள் : 18.08.1997ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சி கட்டிட விதிகள் 1997 விதி எண் 3 மற்றும் அரசாணை எண். 172/ வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை, ந.வ.4(3), நாள் : 13.10.2017 ஆகியவற்றின்கீழ் நாட்றம்பள்ளி வட்டம், சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி கிராம சர்வே எண் . 313/3எ- ல் 2.01 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு வீட்டுமனைப்பிரிவில் மனை எண்.1 முதல் 79 வரையிலான வீட்டுமனைகளுக்கு அரசு நிர்ணயித்துள்ள கட்டணங்களை செலுத்தியுள்ளதை தொடர்ந்து மேற்படி குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரன்முறை செய்து இதன்வழி ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள் :**

1. அரசாணை எண்.78/ வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் : 04.05.2017ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியே மேற்படி குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவில் அமைக்கப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பொது உபயோக ஒதுக்கீடு திறவிடம் ஆகியன பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சிக்கு தானபத்திர ஆவண எண். 4466/2017 , நாள் : 04.10.2017ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு பின்பே அரசாணை எண்.172/ வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை , நாள் : 13.10.2017 வெளியிடப்பட்டுள்ளது. எனவே ஊராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ள காலியிடத்தில் ஊராட்சியின் அனுமதியின்றி எவ்வித பணிகளையும் மேற்கொள்ள மேற்படி குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவு உரிமையாளருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

2. அங்கீகரிக்கபடாத குடியிருப்பு வீட்டு மனைப்பிரிவில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள17 குடியிருப்புகளுக்கான கட்டிடங்களை ஊராட்சியில் வரன்முறைப்படுத்தி கொள்ளவேண்டும். மேலும் காலியாக உள்ள 62 வீட்டு மனைகளில் குடியிருப்புகளுக்கான கட்டிடங்களை கட்டுவதற்கு ஊராட்சியின் கட்டிட வரைபட அனுமதியினை பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

3. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்டுள்ள 9 வீட்டு மனைகளுக்கான கூராய்வு கட்டண தொகையினை ஒரு மனைக்கு ரூ.500/- 9 மனைகளுக்குண்டான தொகையினை சிண்டிகேட் வங்கி வேலூர் கிளையின் சேமிப்பு கணக்கு எண். 62552200006638-ல் செலுத்தி அதற்குண்டான ஆவணங்களை இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளை மீறும்பட்சத்தில் மேற்படி வீட்டு மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் இரத்து செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

30/1/18

தனி அலுவலர் (ம) வட்டார வளர்ச்சி அலுவலர் (கிஊ)
பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி
சோலையார்பேட்டை ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்
திரு.பி. பானு பிரகாஷ்
பேஸ் -2. மனன்யா ஹோம்ஸ்
புத்துக்கோவில், பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி, நாட்றம்பள்ளி தாலுக்கா

30/1/18 30/1/18

நகல் :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் மண்டலம், நெ.239, பேஸ் 2 , வேலூர்.9
2. உதவி இயக்குநர், நில அளவை (ம) பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.9
3. வட்டாட்சியர், நாட்றம்பள்ளி வட்டம்
4. சார்பதிவாளர், வாணியம்பாடி.

நகல்பணிவு : உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), திருப்பத்தூர் கோட்டம், திருப்பத்தூர்

P. Karthi...
30/1/18

Scanned by CamScanner